கிண்ணியா பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 ஆகஸ்ட் 12 மற்றும் 2020 ஆகஸ்ட 19 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிண்ணியா பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டில் ஊழியர் கடன் நிலுவையானது பதிவேட்டிற்கும் கணக்குகளுக்குமிடையே ரூபா 92,951 தொகை அதிகரித்து காட்டப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் தொடர்ச்சியாக சீராக்கம் செய்யப்படாது கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | கணக்குகளில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | 2018 மே ஆண்டுக்கான முத்திரை தீர்வை ரூபா 7,821,540 மற்றும் மீளாய்வாண்டு இறுதிவரைக்குமான முத்திரைத் தீர்வை நிலுவை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பெறவேண்டியவற்றை உரிய நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் மீதியானது மீளாய்வாண்டிற்கு கொண்டு வரும் போது ரூபா 50,295 தொகை அதிகரித்துக் கொண்டுவரப்பட்டுள்ளது. | உரிய தொகை கொண்டுவரப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 35,511,602 தொகையான காணிகட்டிடங்கள் உண்மையான பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | காணி கட்டிடங்கள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (v) | சபையில் 2018 ஆம் ஆண்டு பொருள் இருப்பு கணிப்பீட்டு சபையினால் ஏலவிற்பனைக்காக சிபாரிசு செய்யப்பட்ட 60 பொருட்கள் விற்பனை செய்யப்பட்ட போதிலும் மற்றும் அழிப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்ட 295 பொருட்கள் அழிப்பு செய்யப்பட்ட போதிலும், அவற்றின் கொள்வனவுப் பெறுமதி கணக்கிடப்பட்டு சொத்துக்களில் கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | கழிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்டபொருட்க ளின் பெறுமதி சொத்துக்களின் பெறுமதியிலிருந்து கழித்துக் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கழித்து காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (vi) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சபைக்கு சொந்தமான 19 மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் தொடர்பில் ரூபா 18,799,710 பொறி இயந்திரங்கள் மற்றும் தளபாடம் பொருத்துக்களின் பெறுமதி முறையே ரூபா 3,275,705 மற்றும் ரூபா 4,683,015 தொகை காட்டப்பட்டபோதிலும், அவற்றின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு பெறுமதியை நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(ஐ) பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள சந்தைக் குத்தகை வாடகை ரூபா 5,914,886 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும்,நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த சில ஆண்டுகளுக்கு மாத்திரமே விபரங்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. கடந்த கால விபரங்களை பெற முடியாதுள்ளமையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது. |

(ஐ) செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| • மீளளிக்கக்கூடிய வைப்புக்களாக ரூபா 5,872,553 தொகையாக காட்டப்பட்டுள்ளபோதிலும், தகவல்கள் சபையில் காணப்பட்டிருக்கவில்லை. மற்றும் அவற்றைக் கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போதிய தகவல்களைப் பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய கணக்குகள் |
| • சபையின் பணியாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி ரூபா 1,210,976 தொகை தொடர்பில் பணியாளர்களது ஆவணங்கள் இனங்காணப்பட்ட போதிலும், அவற்றை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுவருகின்றது. | ஊழியர் சேமலாப நிதியை உரிய முறையில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ்விடயம் தொடர்பில் உள்;ராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனையைப் பெற்று சபை அனுமதியுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| • இரு வருடங்களுக்கு மேலாக கடன்கொடுத்தோர் மீதியாக ரூபா 2,291,089 தொகை காட்டப்பட்டுள்ளபோதிலும், அவற்றை இனங்கண்டு உரிய நபர்களுக்கு கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை இணங்கண்டு கொடுத்துத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்துக்கு விபரங்கள் கோரப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்றதும் எதிர்காலத்தில் இவ்விடயம் சீர் செய்யப்படும். |
| • பிரதேச சபை ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஓய்வூதிய பங்களிப்பு ரூபா 2,227,497 தொகையை கொடுத்து தீர்க்கப்படாது 10 வருடங்களுக்கு மேலாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுவருகின்றது. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

1.4 இணங்காமைகள்

-----------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவு | சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்படுகின்ற போதிலும், நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்றவற்றிக்கான 25 சதவீதமான ஆலோசனை கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளது. | உரிய குழுக்களை அமைத்து அதற்கு ஏற்ற மாதிரி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் உரிய குழுக்களை அமைத்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் பிரிவு 571 | 03 தொடக்கம் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய கேள்வி, ஒப்பந்த பிடிகாசு மற்றும் மாற்றப்படாத காசோலை வைப்புக்கள் என்பவற்றை கணக்கிட்டு நிதிப்பிரமாணத்திற்கு அமைய கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதனை தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

(இ) வரித்தேவைப்பாடுகளுடன் இனங்காமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஒரு ஒப்பந்தகாரருக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 756,010 | ஏயுவு ஐஎெழைஉந | இனி வரும் காலங்களில் வேலைத்திட்டங்களுக்கான |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொடுப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | ஏயுவு கொடுப்பனவு உரிய ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கு முன்பாக ஏயுவு ஐஎெழஉைந பெற்றுக் கொள்வதற்கும் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 2,184,946 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,366,600 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2019.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வாடகை | 8இ850 | 10இ845 | 458 | 10இ297 | 4இ585 | 6இ910 | 4இ15 | 1இ995 |
| அனுமதி பத்திர கட்டணம் | 2இ045 | 3இ990 | 10 | 3இ980 | 1இ470 | 2இ861 | 916 | 1இ945 |
| மொத்தம் | 10இ895 | 14இ835 | 468 | 14இ277 | 6இ055 | 9இ771 | 1இ331 | 3இ940 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுமதிப்பத்திர கட்டணங்கய் மீதான வருமானம் ரூபா 2,045,000 தொகையாக மதிப்பிடப்பட்ட போதிலும் அறவீடானது ரூபா 10,000 தொகையாக காணப்பட்டுள்ளது. இச் செயற்பாடு பாதீட்டின் பலவீனத்தைக் காட்டுகிறது. | மதிப்பீட்டை உரிய முறையில் மதிப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த தொகை பணமே அறிவிடக்கூடியதாக இருந்தது |

2.2.3 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அண்ணளவாக ரூபா 2 மில்லிய வரையான வருமான இழப்பு சபைக்கு ஏற்பட்டிருந்தது. | வீதவரியை உரிய முறையில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில்வீத வரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

2.2.4 கடை குத்தகை வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகையாளர்கள் கடைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்கின்ற போது ஆரம்பத்தில் செலுத்துகின்ற குத்தகைப்பணத்தினை வாடகை முற்பணமாக கருதுவதுடன், அவ் முற்பணத்திற்கான காலம் நிறைவு பெற்றவுடன் கடைகளை நடத்துவதை கைவிடுகின்றனர். இதனால் சபையினால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் இழக்கப்படுகின்றது. இவ்வாறான செயற்பாட்டை தவிர்த்துக்கொள்ள முறையான பொறிமுறையொன்றை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்த சபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | உரிய முறையில் ஒப்பந்தம் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் காட்டப்பட்ட ரூபா 7,284,748 நிலுவை தொகையில் மீளாய்வாண்டிற்கு முன்னைய 09 வருடங்களின் காலப்பகுப்பாய்வின் படி ரூபா 7,273,841 தொகை நிலுவையாக உள்ளது. | நிலுவைகளை அறவிட உரிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | பொதுச் சந்தைக் கட்டடத்தொகுதியில் காணப்படும் 36 கடைகள் மற்றும் 32 திறந்தவெளிக் கடைகள் தொடர்பாக சபையானது ரூபா 1,720,000 தொகையினை மீளளிக்கத்தக்க வைப்பாக அறவிட வேண்டியிருந்த போதிலும் இன்றுவரை ரூபா 593,000 தொகையினை மாத்திரமே சபை அறவீடு செய்துள்ளது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூடிய கடைகளிடமிருந்து முழுமையாக பெறப்பட்டுள்ளது. திறந்த வெளி கடைகளில் இருந்து தற்போது அறவிடப்படுகின்றது. |

2.2.5 காணிகள் விற்பனை மீதான வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12016 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான காணிகள் விற்பனை மீது 1மூ சதவீத விற்பனை வரி மொத்தமாக ரூபா 3,948,206 தொகை மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான காணிகள் விற்பனை வரி என்பனவற்றை கணக்கிட்டு அறவிடுவதற்கான நடவடிக்கைகளை சபையானது மேற்கொண்டிருக்கவில்லை. | பெறவேண்டிய தொகையைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் குறித்த காலப்பகுதிக்குள் முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

2.2.6 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரைக்குமான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2020 மே 20ஆம் திகதி வரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலத்தில் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் குறித்த காலப்பகுதிக்குள் முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

2.2.7 முத்திரைக் தீர்வைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இவ் நிலுவைத் தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் குறித்த காலப்பகுதிக்குள் முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேணடும். இருந்தம், சபையினால் 05 உபவிதிகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்;ராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது. | உபவிதிகள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உப விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறுவதற்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கழிவுகளை தரம்பிரித்தல் செயற்பாடுகள் முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய கவனம் எடுக்கப்பட வேண்டும். | இயந்திரங்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | சபையின் அதிகார எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகளை திண்மக் கழிவு நிலையத்தில் கொட்டப்படுகின்ற போதிலும், | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | உக்கலடையும் மற்றும் உக்கலடையாத குப்பைகளை தரம் பிரித்து மீள்சுழற்சி முறையில் சேதனப்பசளைகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | சுற்றுச்சூழல் பிரச்சினைகள்<br>-------------------------------------------- | | |
| | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்படாது விலங்கறுமனைகள் நடாத்தப்படுகின்றது. மேலும் இங்கு அறுக்கப்படும் விலங்குகளின் இரத்தம் மற்றும் கழிவுகள் அருகிலுள்ள ஆற்றில் கலக்கப்படுதல் காரணமாக சுற்றாடல் மாசடைவதற்கு வழிவகுத்துள்ளது. இவ்வாறான சுற்றுச்சூழல் பிரச்சினைகள தீர்த்துக் கொள்வதற்கான முறைமையொன்று கண்டுகொள்ளப்பட்டு அதனை தீர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்பட்டு விலங்கறுமனைகள் நடத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தனியார் நிறுவனம் ஒன்றினால் மாடுகள் அறுக்கும் மடுவம் ஒன்று ஆரம்பிப்பதற்கு சபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தியதும் இப்பிரச்சினை எதிர்காலத்தில் தீர்க்கப்படும். |
| (iv) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>------------------------------------------------- | | |
| | ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நடைமுறைப்படுத்தப்படாத வங்கி கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென 2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட வங்கிக் கணக்கில் ரூபா 85,607 தொகை செயற்பாடற்ற வங்கி மீதியாக காணப்படுகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது அனைத்து வங்கி நடவடிக்கைகள் பொதுவான வங்கி கணக்கிலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| (ii) | 2018 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பு சபை வழங்கிய பரிந்துரைகளின் படி ஏலத்தில் விற்கப்படவேண்டிய 6 வகைகளின் 6 பொருட்களின் ஏலவிலைகள் மதிப்பீடப்பட்டுள்ளன. ஆனால் சொத்துக்களின் மதிப்பீடப்பட்ட மதிப்பை மிகைப்படுத்தியதால் சொத்துக்கள் விற்கப்படவில்லை மற்றும் சபை அவற்றை மறுமதிப்பீடு செய்து விற்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாவது மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் அதை விற்க முடியாததால் மீண்டும் மதிப்பீடு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

(ஆ) தீர்க்கப்படாத முற்பணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 10 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத ரூபா 173,544 கணக்காய்வுத் திகதியான 2020 மே 20 ஆம் திகதிவரை தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான வபரங்கள் இங்கு காணப்படவில்லை தற்போது வழங்கப்படும் முற்பணங்கள் நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (09) ஆளணியினர் பற்றாக்குறையாக காணப்பட்டிருந்தும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்கள்னள நடவடிக்கை எடுக்கப்படும் |

3.4. சொத்து முகாமைத்துவம்

3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் வழிநடத்தப்படுகின்ற 05 நூல் நிலையங்களின் மீதான பொருள் இருப்பு மெய்மையாய்வின் போது 1,211 புத்தகங்கள் நூலகங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இருந்தும் இது தொடர்பாக முறையான விசாராணை சபையினால் எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | தங்களால் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.4.2 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொருள் இருப்பு கணிப்பீட்டு சபையினால் 06 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் 02 வாகனங்கள் திருத்தம் செய்வதற்கும் சிபாரிசு செய்யப்பட்ட போதிலும், 02 ஆண்டுகளுக்கு மேலாக அவற்றை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது . |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையில் 03 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படக்கூடிய நிலையில் காணப்பட்ட போதிலும், அவற்றை திருத்தம் செய்து பயன்படுத்ததாது சபையில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது . |
| (இ) | வாகனங்களில் 11 வாகனங்களின் உரிமையாண்மையை பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திகதியான 2020 மே 20ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிமையான்மை உறுதிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது . |
| (ஈ) | சபையில் உள்ள கார், முச்சக்கரவண்டிகள் மற்றும் 2 பிக்கப் ஆகியவை 3 முதல் 6 ஆண்டுகளாக பாவனைக்கு பயன்படுத்தப்படாமல் பழுதுபார்ப்பதற்கும், ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட வேண்டும் | ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

3.4.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் உப்பாறு பகுதியில் உல்லாச பிரயாணிகளின் நலன் கருதி பொது மலசலகூடம் ரூபா 1,000,000 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இன்று வரை பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்படுவதுடன், இக்கட்டிடமானது அப்பகுதியில் உள்ள மதஸ்தலம் ஒன்றின் எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டிடத்தின் உரிமையாண்மை தொடர்பான முறையான ஆவணங்கள் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இதனை பொதுமக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்பதுடன் காணி தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வேண்டுகோள் கடிதம் கிண்ணியா பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது |

3.4.4 காணி மற்றும் கட்டிடங்கள் உரிமையாண்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் காணி கட்டிடங்கள் பதிவேட்டில் பதியப்பட்டு பயன்படுத்தப்படும் மற்றும் மக்களின் பாவனைக்காக வழங்கப்பட்ட 17 காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையாண்மை அரசுக்கு சொந்தமானதாக உள்ளது. இக்காணிகளின் உரிமையாண்மை பிரதேச சபையின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கையை துரிதப்படுத்தி சபையினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச செயலாளருக்கு பிரதேச சபையின் பெயருக்கு மாற்றி தருவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

4. பெறுகை

4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் 2020 ஆண்டிலிருந்து பெறுகைச் சபை திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வுத் திகதியான 2020 மே 20 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |